## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 43. ஸ்ரீரவி தாஸ்

---

வடதேசத்தில் ஸ்ரீமத்ராமானுஜரின் கொள்கையைப் பின்பற்றும் பரம்பரையை ஆரம்பித்து வைத்த ஸ்ரீராமானந்த் மஹராஜின் ப்ரதான சீடர் ரவி தாஸ்.மிகவும் தாழ்ந்த குலத்தில் பிறந்த இவரே ஸ்ரீமத்ராமானுஜரின் ஏற்றத்துக்கும் மேன்மையான கொள்கைகளை விளக்குவதற்கும் வடதேசத்தில் தன் வாழ்வை அர்ப்பணித்தவர்.

**வடதேசத்தில் மஹாகவி பாரதியார் வாழ்ந்த காலத்தில் இவரது பாடல்களில் ஈடுபாடு கொண்டாராம்.**

ரவி தாஸ் பக்திப் பரம்பரை அன்பர்கள் வடதேசத்தில் இன்றும் பரவி வாழ்வதைக் காணலாம்.

மீரா பாயின் அன்னை ஜாலிஜி இவரது ப்ரதான சிஷ்யை ஆவார்.மிக அழகிய எளிய ஹிந்து மொழியில் ஆழ்வார்களின் கருத்துக்கள் பொதிந்த பாடல்களை ராமானுஜக் கொள்கை கூட்டி மக்களுக்குப் பரப்பியவர்.சீக்கியர்தம் குரு க்ரந்த் சாஹிப் புனித நூலில் இவரது அருளிச்செயல்கள் இடம்பெறுகின்றன.

ஸ்ரீமத் ராமானுஜரின் பக்தியையும் சேவையையும் மனதில் க்ரஹித்து அப்படியே அவர் வாழ்ந்தார், இதன் மூலம் அஷ்டமாசித்திகள் கைவரப் பெற்றார்.

### இவரது சில உயர்ந்த லீலைகள்

* மக்களுக்குத் தோலினால் ஆன காலணிகளைச் செய்யும் இவர் சதா ஸ்ரீராம நாமம் ஜெபித்தே செய்வார்.தன்னை பரதனாக பாவித்து, அனைத்து மக்களுள் இருக்கும் ப்ரஹ்மத்தை ஸ்ரீராமனாக பாவித்து அவர்தம் பாதங்களுக்குக் காலணி செய்வார்.

* பயிர் வேலை செய்யும் போதும் ஸ்ரீராம மந்த்ர ஜெபம் செய்வார், பசும் பயிர்கள் ஸ்ரீராமனாகவே இவருக்குப் படும். இறைவன் இவருக்கு வயலுக்குத் தண்ணீர் பாயும் வாய்க்காலில் சாளக்ராமம் வடிவில் கை சேர்ந்தானாம்.

* அழகிய தோல் ஆசனம் செய்து அதில் சாளக்ராமத்தை வைத்து பூஜிக்க, அதை உள்ளூர் அந்தணர் எதிர்க்க இறைவன் அந்தணரை தண்டித்தாராம்.

* அதே அந்தணர் ஸ்ரீராம நவமி உத்சவத்தில் இவருக்கு திவ்ய ப்ரசாதம் தர மறுக்க,

ப்ரசாத வரிசையில் நிற்கும் அனைவரும் ரவி தாஸ் வடிவிலேயே இருக்க ஊரே பார்த்து இவரை நமஸ்கரித்ததாம்.

* இச்செய்தி அறிந்தே மீராவின் அம்மை இவரை அண்டி உபதேசம் பெற்றிருக்கிறார்.

* ஸ்ரீமத்ராமானுஜரின் மரபினை எடுத்து நிமிர்த்திய பக்தர் இவர்.

ஹரி ஓம்!